செய்தி வெளியீடு எண்.109 நாள் : 28.11.2020

# பத்திரிக்கைச் செய்தி

## ஆதிதிராவிடர் நலத்துறையில் அலுவலக உதவியாளர் மற்றும் ஈப்பு ஓட்டுநர் வேலைக்கான விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன

சென்னை மாவட்ட ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நல அலுவலகத்திற்கு அலுவலக உதவியாளர்–1 மற்றும் ஈப்பு ஓட்டுநர் – 1 பணியிடங்கள் (காலமுறை ஊதியம்) காலிப்பணியிடங்களை நிரப்புவதற்கு தகுதியான நபர்களிடமிருந்து விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன.

### அலுவலக உதவியாளருக்கான தகுதி

- விண்ணப்பதாரர் 8ம் வகுப்பு தேர்ச்சி பெற்றிருக்க வேண்டும்.
- ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினருக்கு முன்னுரிமை அளிக்கப்படும்.
- 18 வயது முதல் 35 வயது வரை உள்ளவர்களாக இருக்க வேண்டும்.
- சென்னை மாவட்டத்தில் குடியிருப்பவராக இருக்க வேண்டும்.

### ஈப்பு ஓட்டுநருக்கான தகுதி

- விண்ணப்பதாரர் 8ம் வகுப்பு தேர்ச்சி பெற்றிருக்க வேண்டும்.
- LMV ( இளகு ரக அல்லது கனரக ) ஓட்டுநர் உரிமம் பெற்றிருக்க வேண்டும்.
- இரண்டு ஆண்டு முன்அனுபவம் பெற்றிருக்க வேண்டும்.
- மோட்டார் வாகன சட்டம் Act 1988 (Central Act 59 of 988) இதன்படி ஓட்டுரிமை பெற்றிருக்க வேண்டும்.
- மோட்டார் பொறிமுனைகள் பற்றி தெரிந்திருக்க வேண்டும்.
- ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினருக்கு முன்னுரிமை அளிக்கப்படும்.
- 18 வயது முதல் 35 வயது வரை உள்ளவர்களாக இருக்க வேண்டும்.
- சென்னை மாவட்டத்தில் குடியிருப்பவராக இருக்க வேண்டும்.

தகுதியான நபர்கள் சென்னை மாவட்ட ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நல அலுவலகத்தில் விண்ணப்பங்களை பெற்று நேரடியாகவோ, பதிவஞ்சல் மூலமாகவோ மாவட்ட ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நல அலுவலகத்திற்கு 09.12.2020–க்குள் விண்ணப்பித்திட சென்னை மாவட்ட ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நல அலுவலர் கேட்டுக்கொண்டுள்ளார்.

இத்தகவலை சென்னை மாவட்ட ஆதிதிராவிடர் மற்றும்_பழங்குடியினர் நல அலுவலர் அவர்கள் தெரிவித்துள்ளார்கள்.

**வெளியீடு**
**செய்தி மக்கள் தொடர்பு அலுவலர்,**
**சென்னை மாவட்ட ஆட்சியர் அலுவலகம்,**
**சென்னை–01**